**கும்பகோணம் சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை. திரு. ம. கோவிந்தராவ். இ.ஆ.ப.,**

நக.5904-2015-அ1.

நாள். 09.07.2016

பொருள்- பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் தொகுதி – தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு. ஆர். வினோத்குமார் த/பெ காலஞ்சென்ற திரு. ராமமூர்த்தி என்பவரது பணியினை கிராம நிர்வாக அலுவலர் நிலையில் வரன்முறை செய்தல் - ஆணையிடப்படுகிறது.

பார்வை-

1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ-1)த்துறை நாள். 02.03.2016.
2. சென்னை வருவாய் நிர்வாகம், இணை ஆணையர் அவர்களது கடித எண்கள். ஆகு.2-50185-2014, ஆகு.2-35690-2015, ஆகு2-9825-2015, ஆகு2-35701-2015, ஆகு2-35700-2015, ஆகு.2-13008-2015, ஆகு2-15278-2015 மற்றும் ஆகு.2-9464-2015, நாள். 06.04.2016.
3. சென்னை, வருவாய் நிர்வாக இணை ஆணையர் அவர்களது கடித எண். ஆகு.2-41472-2015. நாள். 23.03.2016.
4. சென்னை வருவாய் நிர்வாகம், இணை ஆணையர் அவர்களது கடித எண்கள். ஆகு.2-26169-2015 மற்றும் ஆகு.2-31486-2015, நாள். 09.05.2016.
5. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைந க.57140-2011-எஸ்.1. நாள். 28.06.2016.
6. மற்றும் தொடர்புடைய இதர ஆவணங்கள்.

----------

ஆணை:

தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராக பணியாற்றிய போது 27.12.2010 அன்று காலமான திரு. ராமமூர்த்தி என்பவரின் மகன் வினோத்குமார் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக கிராம நிர்வாக அலுவராக பணி நியமனம் செய்யப்பட்டு தனியர் 02.06.2014 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதால், திரு. ஆர். வினோத்குமார் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 02.06.2014 முற்பகல் முதல் கிராம நிர்வாக அலுவலர் பதவியில் முறையாக வரன்முறை செய்திட அரசிடம் ஆணை வேண்டி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் வழியாக முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கருத்துரு சென்னை வருவாய் நிர்வாக இணை ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பார்வை2, 3 மற்றும் 4 ல் சென்னை வருவாய் நிர்வாக இணை ஆணையர் அவர்கள் பார்வை-1ல் காணும் அரசாணையின் படி கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைவில் பணிவரன்முறை செய்திடும் பொருட்டு எந்த வித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத பணி நியமனமும், விதிகளுக்குட்பட்டு வரன்முறை படுத்திட சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக

தெரிவித்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர்களது கோப்புகள் திருப்பபப்பட்டுள்ளது.

3. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அதனை ஏற்று பார்வை5ல் காணும் செயல்முறை ஆணையில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கோட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்கள் 22 நபர்களுக்கு பணி . வரன்முறை செய்திட ஆணையிட்டுள்ளார்கள்.

4. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ-1)த்துறை நாள். 02.03.2016.ன்படியும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை நக. 57140-2011-எஸ்.1. நாள். 28.06.2016ன்படியும், தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில் கிராம உதவியாளராக பணிபுரியும் போது 27.12.2010 அன்று இறந்து போன திரு. ராமமூர்த்தி என்பவரின் மகன் **திரு. ஆர். வினோத்குமார் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வருவாய்த்துறையில், தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில் கிராம நிர்வாக அலுவலராக பணியமர்த்தப்பட்ட நாளான 02.06.2014 முற்பகல் முதல் கிராம நிர்வாக அலுவலர் .பதவியில் அவரது பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.**

5. திரு. ஆர். வினோத்குமார் என்பவர் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்குரிய உடல் தகுதியினை பெற்றிருக்கிறார் என்பதை உறுதி செய்து கொண்ட பின்பு சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்கள் மேற்குறித்த உத்திரவினை நடைமுறைப்படுத்தி தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

3/5

**சார் ஆட்சியர்,**
**கும்பகோணம்.**

**பெறுநர்,**
திரு. ஆர். வினோத்குமார்,
த-பெ. ராமமூர்த்தி,
கிராம நிர்வாக அலுவலர்,
கும்பகோணம் வட்டம்.

**நகல்**
வட்டாட்சியர்,
கும்பகோணம்.

**நகல்**
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.